செ.வெ.எண்.155 நாள்.06.04.2017

# பத்திரிக்கைசெய்தி

காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பல துறைகளில் பயிற்சி பெற்று மற்றும் இதர வேலையில்லாத ஊரக பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் வேலைவாய்ப்பு முகாம் 08.04.2017 அன்று காலை 10.00 மணி முதல் வஞ்சுவாஞ்சேரி (படப்பை அருகில்) ராசி பொறியியல் கல்லூரி வளாத்தில் நடத்தப்பட உள்ளது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில், எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, மேல்நிலைக்கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் பட்ட படிப்பு முடித்த 18 வயது முதல் 30 வரையுள்ள ஆண், பெண் இருபாலரும் கலந்துகொண்டு வேலைவாய்ப்பு பெறலாம்.

இம்முகாமில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு முகாமிற்கு கல்வித்தகுதி, குடும்ப அட்டை மற்றும் புகைப்படம் சான்றிதழ்களின் அசல் மற்றும் நகலுடன் தவறாது கலந்து கொண்டு நல்ல ஊதிய விகிதத்தில் வேலைவாய்ப்பினை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.